பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 30 | வியாழக்கிழமை | 16.11.2023 | அதிர்வு 107

## துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

லுனுகம்வெஹெர தேசிய பூங்காவில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம் பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர். 08

# மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் அதிகாரத்தைப் பிடுங்குவதிலேயே குறி



### 'பட்ஜட்' காட்டுவது அதைத்தான் என்று போட்டுத் தாக்குகின்றார் விக்னேஸ்வரன்

**"மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தும் எந்த வொரு எண்ணமும் அரசுக்கு இல்லை என்பதை 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் உறுதிப்படுத்தி யுள்ளது. அத்துடன் மாகாணங்களின் அதிகாரங்க ளைப் பறித்து இன்னும் மத்தியில் குவிக்கும் திட்டமும் வெளிப்பட்டுள்ளது."**

**- இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரி வித்தார்.** 06

# பொருளாதாரக் கொலைகாரர்கள் யார்? வரலாற்றுத் தீர்ப்பு வழங்கிய நீதிமன்றம்

### சபையில் சஜித் தெரிவிப்பு



"நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு சென்றவர்களைச் சட்டத் துக்கு முன்னால் கொண்டு செல்ல வேண்டும் என நாங்கள் தொடர்ந்து தெரிவித்து வந்தோம். என்றாலும், தற் போது உயர்நீதிமன்றம் இது தொடர்பாக வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பொன்றை வழங்கியுள்ளது."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடு கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சி என்ற வகையில் நாங்கள் இந்த நாட் டின் பொருளாதாரச் 06

# தோட்டத் தொழிலாளர்களுக்கும் ரூ.10,000 கொடுப்பனவு அவசியம்

### நாடாளுமன்றில் இராதாகிருஷ்ணன் வலியுறுத்து



மலையகப் பெருந்தோட்டத் தொழிலா ளர்களுக்கும் வாழ்க்கைச் செலவு கொடுப் பனவாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.இராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடை பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் இரண் டாம் வாசிப்பு மீதான 2ஆம் நாள் விவா தத்தில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் 08

# தந்தையின் மரணச் சான்றிதழை எடுக்கச் சென்ற மகனும் மரணம்

### மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிர் பறிப்பு



உயிரிழந்த தந்தையின் இறு திக்கிரியைகளுக்காக மரணச் சான்றிதழை எடுக்கச் சென்ற மகனும் விபத்தொன்றில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இந்தப் பரிதாபச் சம்பவம் புலத் சிங்கல – பஹல நாரகல பிர தேசத்தில் 06




கடந்த வாரத்தில் ஒரு செய்தி ஆச்சரியத்தைத் தந்தது. மட்டக்களப்பு – மயிலத்தமடு, மாத வனைப் பகுதியில் அத் துமீறிக் குடியேறிய சிங்களக் குடும்பங் களை வெளியேற்றுவ தற்கான உத்தரவை அரசுத் தரப்பினரே – மகாவலி அபிவிருத்தி அதிகார சபை உட்பட்ட தரப்பினரே – ஏறாவூர் நீதிவான் நீதிமன்றத்தில் விண்ணப்பித் துப் பெற்றுக் கொண்டுள்ளார்கள் என்ற செய்திதான் அது. 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# பரதம் பற்றித் தவறான கருத்தை வெளியிட்ட மௌலவிக்கு எதிர்ப்புக் காட்டி ஆர்ப்பாட்டம்

## மட்டு. சுவாமி விபுலானந்தா அழகியல் மாணவிகள் முன்னெடுப்பு












**(பழுவூரான்)**

தமிழ்க் கலாசாரம் பற்றியும், பரத நாட்டியம் பற்றியும் தவறான கருத்தை வெளியிட்ட மௌலவிக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுப் புதன்கிழமை மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் கற்கைகள் நிறுவகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அண்மையில் அந்த மௌலவி சமூக ஊடகமொன்றில் பரதம் பரதினிகள் ஆடும் நடனம் எனத் தெரிவித்திருக்கிறார். இது உண்மையில் தெய்வீகத் தன்மை வாய்ந்தது.

இந்நிலையில் தவறான கருத்தை வெளியிட்ட அந்த மௌலவி அக்கருத்தை வாபஸ் பெற்று, மன்னிப்புக் கேட்க வேண்டும். இல்லையேல் அவருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என மாணவர்கள் தமது கருத்தைப் பதிவு செய்தனர்.

# 2024 வரவு - செலவுத் திட்டத்தின் இலக்குகளை அடைவது சவாலானது

## பிட்ச் ரேட்டிங் தகவல்




2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட இலக்குகளை அடைவதில் அபாய நிலைமை காணப்படுகின்றது என் பிட்ச் ரேட்டிங் எனப்படும் நிதி தரப்படுத்தல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

வரவு – செலவுத் திட்டம் குறித்த தமது நிலைப்பாட்டை விளக்கும் வகையில் பிட்ச் ரேட்டிங் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய தரவுகளுக்கு அமைய, மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.1 வீதமாக இருக்கும் என கணிப்பிடப்பட்டுள்ளதாகவும், வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை அதனைவிட அதிகமாக இருக்கலாம் எனவும் பிட்ச் ரேட்டிங் நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளது.

2024 ஆம் ஆண்டிற்கான அரசாங்கத்தின் வருமான இலக்குகளை எட்டுவது சவாலானது எனவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

வருமான இலக்குகளை அடைய பெறுமதிசேர் வரியை 18 சதவீதமாக அதிகரித்ததன் மூலம் பொருள்களின் விலை 8.7 வீதம் அதிகரிக்கலாம் எனவும் பிட்ச் ரேட்டிங் நிறுவனம் கணித்துள்ளது.

அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கு நிவாரணம் வழங்குவதற்காக செலவுகளை 14 வீதத்தால் அதிகரிக்கும் நோக்கில் சம்பளம் , கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் , வரவு – செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மூலதனச் செலவுகள் குறைக்கப்படலாம் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எதிர்பார்க்கப்படும் 3.3 வீத பொருளாதார வளர்ச்சி வேகம் நிச்சயமற்றது எனவும் பிட்ச் ரேட்டிங் நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
“ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர,
மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்.”
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
VAN FOR RENT
A/C
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230

# பொருளாதார நெருக்கடிக்குக் காரணமான ராஜபக்ஷகள் நஷ்ட ஈடு செலுத்த வேண்டும்

## எம்.ஏ.சுமந்திரன் நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு



"உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை தடுக்கத் தவறிய குற்றச்சாட்டில் குற்றவாளிகளாக இனம்காணப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட 5 பேரும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்ட ஈடு செலுத்த வேண்டுமென உத்தரவிட்ட உயர்நீதிமன்றம், நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்களாக அடையாளம் காணப்பட்ட ராஜபக்ஷ சகோதரர்கள் நாட்டு மக்களுக்கு நஷ்ட ஈடு செலுத்த வேண்டுமென ஏன் உத்தர விடவில்லை?"

– இவ்வாறு தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 2 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எம்.ஏ. சுமந்திரன் மேலும் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:–

"நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ உட்பட முன்னாள் நிதியமைச்சர்களான மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ ஆகியோர் பொறுப்புக் கூற வேண்டும்.

அத்துடன், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், திறைசேரியின் செயலாளர் எஸ். ஆர்.ஆடிகல, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர். டபிள்யூ. டி.லக்ஷ்மன், முன்னாள் ஜனாதிபதி செயலாளர் பி.பி. ஜயசுந்தர உட்பட மத்திய வங்கியின் நாணய சபையின் உறுப்பினர்கள் நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என்று பிரதம நீதியரசர் தலைமையிலான நீதியரசர் குழாம் தீர்ப்பளித்துள்ளது. இந்தக் குழாமில் ஒருவர் மட்டும் மாறுபட்ட தீர்ப்பை வழங்கியுள்ளார்.

இதே உயர்நீதிமன்றம்தான் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை தடுக்கத் தவறிய குற்றச்சாட்டில் குற்றவாளிகளாக இனம்காணப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட 5 பேரும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்ட ஈடு செலுத்த வேண்டுமென உத்தரவிட்டிருந்தது.

ஆனால் நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்களென ராஜபக்ஷ சகோதரர்களை அறிவித்த உயர் நீதிமன்றம் இவர்களினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடிமகனுக்கும் இவர்கள் நஷ்ட ஈடு செலுத்த வேண்டுமென ஏன் உத்தரவிடவில்லை?

ராஜபக்ஷ சகோதரர்களிடம் தேவையானவளவுக்கு பணம் உள்ளது. வெளிநாடுகளிலும் பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது. அவற்றை வெளிக்கொண்டு வந்தால் நாட்டின் பொருளாதார நெருக்கடியை ஓரளவுக்கு தீர்க்க முடியும். நாட்டின் பணம் களவாடப்பட்டதால்தான் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அதனால் மக்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

எனவே, நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமான ராஜபக்ஷ சகோதரர்கள் நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் நஷ்ட ஈடு செலுத்த வேண்டுமென உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்க வேண்டும்." – என்றார்.

# ரயில்வே திணைக்களத்தை அதிகாரசபையாக தரம் உயர்த்த நடவடிக்கை என்கிறார் பந்துல



"ரயில்வே திணைக்களத்தை அதிகார சபையாக தரம் உயர்த்தினால் சிறந்த ரயில் சேவையை பெற்றுக் கொடுக்க முடியும். அதற்காகத் திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றி, தனி கேந்திர நிர்வாகத்திற்குப் பதிலாக நிர்வாகப் பகிர்வை ஏற்படுத்தும் வகையில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது."

– இவ்வாறு போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது எதிர்க்கட்சி உறுப்பினர் நிரோஷன் பெரேரா எம்.பி. எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் உரையாற்றுகையில் –

"திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றி, தனிக் கேந்திரமான நிர்வாகத்திற்குப் பதிலாக நிர்வாகப் பகிர்வை ஏற்படுத்தும் வகையில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஈ டிக்கெட் முறைமை, ஜி.பி.எஸ். முறைமை ஆகியவற்றை ஆரம்பித்து டிஜிட்டல் மயப்படுத்தினால் ரயில் சேவையை சிறந்த சேவையாக முன்னெடுக்க முடியும்.

அத்துடன், ரயில்வே திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றுவதற்காக விசேட நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்றை நியமித்து அதன் அறிக்கையைப் பெற்றுக் கொள்வது அவசியம் என அமைச்சரவை அறிவித்துள்ள நிலையில், அமைச்சரவையின் செயலாளர் விசேட குழு ஒன்றை அதற்காக நியமித்துள்ளார்.

அந்த வகையில் ரயில்வே முன்னாள் பொது முகாமையாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் துறை சார்ந்த நிபுணர்களைக் கொண்டதாக இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்த குழுவின் தீர்மானம் மிக விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம்.

அத்துடன், மின்சாரத்தில் இயங்கும் பஸ் சேவை திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த வருட இறுதியில் அதனை நடைமுறைப்படுத்த முடியும்."– என்றார்.



# மற்றுமொரு ஆய்வுக் கப்பலின் வருகைக்கு இலங்கையிடம் அனுமதி கோரியுள்ள சீனா

இலங்கை கடற்பரப்பின் விசேட பொருளாதார வலயத்தை ஆராய்வதற்காக மற்றுமொரு ஆய்வுக் கப்பலை பயன்படுத்துவதற்கு இலங்கையின் அனுமதியை சீனா கோரியுள்ளது.

இம்முறை சீனா Xiang Yang Hong 03 எனும் கப்பலை அனுப்பவுள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரி 5ஆம் திகதி முதல் பெப்ரவரி 20 ஆம் திகதி வரை இந்த ஆய்வு முன்னெடுக்கப்படவுள்ளது.

Xiang Yang Hong 03 கப்பல் சனாவின் இயற்கை வள அமைச்சகத்திற்கு சொந்தமானது.

Xiang Yang Hong 03 கப்பல் 99.06 மீட்டர் நீளம் கொண்ட பல்நோக்குக் கப்பலாகும்.

இதேவேளை, இந்தியாவின் பலத்த எதிர்ப்பிற்கு மத்தியில் கடந்த ஒக்டோபர் மாதம் இலங்கைக்கு வருகை தந்த Shi Yan 6 கப்பல் இன்று மீண்டும் கொழும்பு துறைமுகத்தை வந்தடையும் என தானியங்கி அடையாள கட்டமைப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும், Shi Yan 6 மீண்டும் நாட்டிற்கு வருகை தருவது குறித்து அமைச்சுக்கு அறிவிக்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

இந்த கப்பல் தொடர்ந்தும் இந்து சமுத்திரத்தில் தரித்து நிற்கின்றது.

கடந்த சில வருடங்களில் 17 இற்கும் மேற்பட்ட சீன உயர் தொழில்நுட்ப ஆய்வுக் கப்பல்கள் இலங்கை கடற்பரப்பிற்கு வருகை தந்துள்ளன.

இதேவேளை, சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங்கின் சிறப்புத் தூதுவரும் மாநிலங்களவை உறுப்பினருமான Shen Yiqin எதிர்வரும் 18 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

அவர் எதிர்வரும் 21ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார் என சீன வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த காலப்பகுதியில் உயர்மட்ட பிரதிநிதிகளுடன் அவர் பேச்சு நடத்தவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலைத்தீவிற்கு விஜயம் செய்துள்ள சீன ஜனாதிபதியின் சிறப்புத் தூதுவர், புதிய ஜனாதிபதி மொஹமட் முய்சுவின் பதவியேற்பு விழாவில் பங்கேற்கவுள்ளார்.

# புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு அடுத்த வாரத்தில் வெளியாகின்றது

2023 ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை அடுத்த வாரம் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெறுபேறுகளுக்கான ஆவணங்களைத் தயாரிக்கும் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன எனத் திணைக்களம் கூறியுள்ளது.

மூன்று லட்சத்து 37 ஆயிரத்து 591 மாணவர்கள் இம்முறை ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

2888பரீட்சைமத்தியநிலையங்களில் இவர்களுக்கான பரீட்சை நடத்தப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# 5 மாதங்களுக்கு முன் காணாமல் போனவர் சாமிமலை வனத்தில் மனித எச்சமாக மீட்பு

(மஸ்கெலியா விசேட நிருபர்.செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள ஹொரண பிளான்டேசனுக்கு உரித்தான ஓல்டன் தோட்ட நிலாவத்தை பிரிவில் உள்ள வனப் பகுதியில் 5 மாதங்களுக்கு முன்பு காணாமல் போன காளிமுத்து கிட்ணசாமி (வயது 76) என்பவர் இறுதியாக உடுத்தி இருந்த உடையுடன் நேற்று முன்தினம் எலும்புக் கூடாகக் கண்டுபிடிக்கப்பட்டார்.

தோட்டத்தில் உள்ள மக்கள் தோட்ட நிர்வாகத்திடம் இத்தகவலைக் கூறியமையைத் தொடர்ந்து நிர்வாகத்தினர் மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமாரவின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

அனைத்து தொடர்ந்து சம்பவ இடத்திற்கு பொலிஸார் சென்று விசாரணை நடத்தினர். ஹட்டன் நீதிவானுக்கும் தகவல் வழங்கப்பட்டது.

இதே வேளையில் அந்த மனித எச்சங்களை கிட்ணசாமியின் மகன் பார்த்து அவை தனது தந்தையினுடையவை என அடையாளம் காட்டினார்.

நேற்று மதியம் சம்பவ இடத்திற்கு ஹட்டன் தடயவியல் பொலிஸார், திடீர் மரண விசாரணை அதிகாரி, ஹட்டன் நீதிமன்ற பதில் நீதவான் போன்றோர் அந்த வனப் பகுதிக்கு வந்து பார்வையிட்ட பின்னர் மனித எச்சம் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு செல்ல பட்டது.

அங்கு மரபணுப் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனக்கு அதிசயமாக இருந்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஆட்சித் தரப்பு திருந்திவிட்டதோ என்ற எண்ணம் கூட எனக்கு வந்து விட்டது. அதனால் கொஞ்சம் தேடிப் பார்த்தேன். 'சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை' என்ற உண்மை அப்போதுதான் தெரியவந்தது.

விடயம் இதுதான்:-

மேய்ச்சல் தரையில் அத்துமீறி சிங்கள குடியேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றமை தொடர்பில் 2021 ஆம் ஆண்டு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு (ரிட் ஒவ் மண்டமஸ்)ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம் (ஜனா) ஆகியோர் மனுதாரர்கள். வாதத்தை நிகழ்த்தியவர் வழமை போல ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

வழக்கின் ஒரு கட்டத்தில் விடயங்களை ஒப்புக்கொண்ட அரசு தரப்பினர், அந்தக் குடியேற்றங்களை தாங்கள் அகற்றுவர் என்று நீதிமன்றத்தில் உறுதி அளித்தனர். அதன் அடிப்படையில் வழக்கு நடவடிக்கை இணக்கமாக முடிவுறுத்தப்பட்டது.

ஆனால், விடயம் முழுமையாக ஒப்பேறவில்லை. இப்போது புதிது புதிதாக, மீண்டும் மீண்டும் குடியேற்றங்கள் நடக்கின்றன என்பதைப் படங்கள், சத்தியக் கடதாசிகள் ஆகியவற்றின் ஆதாரங்களோடு அதே மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பித்து, நகர்த்தல் பத்திரம் ஒன்றை மனுதாரர் தரப்பில் முன்வைத்தார் சுமந்திரன்.

அந்த நகர்த்தல் பத்திரம் கடந்த மாதம் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட சமயம், அரசுத் தரப்பில் முன்னிலையான மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் விக்கும் டி ஆப்ரூ இந்த விடயம் குறித்து எதிர் மனுதாரர்களான மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, அரசு அதிபர், பிரதேச செயலாளர், வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகிய தரப்பினருடன் கலந்தாலோசித்து விட்டுத்தான் வருவார் என்றும், அதற்குக் கால அவகாசம் தரும்படியும் கோரி இருந்தார். அதற்கு சுமந்திரன் தரப்பு ஆட்சேபனை தெரிவிக்காமையால் வழக்கு நேற்றைய தினம் வரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

அந்த வழக்கு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கையிலேயே, அங்கு நிலைமையைச் சமாளிப்பதற்காக இப்படி ஏறாவூர் நீதிவான் நீதிமன்றத்தில், சிங்களக் குடியேற்றங்களை வெளியேற்றும் உத்தரவு பெறப்பட்டிருக்கின்றது - சமாளிப்பு முன்னேற்பாட்டு நடவடிக்கையாக.

நேற்று இந்த நகர்த்தல் பத்திரம் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, ஏறாவூர் நீதிமன்றத்தில் இப்போது உரிய உத்தரவு பெறப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் களத்தில் இருந்து தொலைபேசியில் தனக்குத் தகவல் தரப்பட்டிருக்கின்றது எனக் கூறிய மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் விக்கும் டி ஆப்ரூ, அந்த நீதிமன்ற உத்தரவு ஆவணங்களை நேரில் தாம் பார்த்து, தமது தரப்பின் பதிலைத் தெரிவிப்பதற்கு குறுகிய கால அவகாசம் தரும்படி நேற்றும் கோரினார். அதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

ஆக, அந்த அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களை வெளியேற்றுவதற்கான உத்தரவு பெறப்பட்டது என்பது இங்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தைச் சமாளிப்பதற்கான ஒரு பூச்சாண்டி விளையாட்டு போலவே தோன்றுகின்றது.

நீதிமன்றத்தில் தொடர்ந்து நடக்கும் திருவிழாவைப் பார்ப்போம்.

## மாகாண சபைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 2 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் தெரிவிக்கையில்,

"இனத்துவ வரைபில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் தாயகம் என்பதை அழிக்கும் திட்டம் இந்த வரவு - செலவுத் திட்ட உரையில் பிரதிபலித்தது. மாகாணங்களின் அதிகாரங்களை மத்தியில் குவிக்கும் திட்டங்களும், மாகாணங்கள் ஒருபோதும் தங்களுக்காகச் சிந்திக்க அனுமதிக்கப்படக்கூடாது என்ற இனத்துவ சிந்தனைகளும் இதில் வெளிப்பட்டுள்ளன.

இலங்கையை ஆட்சி செய்யும் இனத்துவ அரசுகள் இனப்படுகொலைகளைத் தான் நிகழ்த்தி வருகின்றன.

நான் வடக்கின் முதலமைச்சராக இருந்தபோது தமிழினப் படுகொலை தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றினேன். அதன்பின்னர்தான் மாகாண சபைகளை வைத்திருப்பதில்லை என்ற தீர்மானத்தை ஆட்சியாளர்கள் எடுத்தனர்.

யுத்தம் முடிந்து 14 வருடங்களாகின்ற போதும் வடக்கில் இராணுவ இருப்பு குறைக்கப்படவில்லை. 2 இலட்சம் இராணுவத்தினர் இன்றும் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர். அரச முகவர்களைப் பயன்படுத்தி பல்வேறு ஆக்கிரமிப்பு, அபகரிப்பு, குடியேற்றத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எமது நினைவுகூரல்கள் கூட நசுக்கப்படுகின்றன.

இவ்வாறான நிலையில்தான் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்திலும் இனத்துவ வரைபில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர் தாயகம் என்பதை அழிக்கும் விடயம் பிரதிபலித்ததுள்ளது. மாகாணங்களின் அதிகாரங்களை மத்தியில் குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதிகாரப் பகிர்வில் எந்தவொரு அக்கறையும் காட்டப்படவில்லை. மாகாண சபைகளுக்கான நிதிகளை மாகாண சபைகளிடம்தான் தர வேண்டும். ஆனால், அதிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

மாகாண சபையை மத்தியின் அங்கமாக வைத்திருக்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தும் எந்தவொரு எண்ணமும் வெளிப்படுத்தப்படவில்லை.

மாகாண சபைகளுக்கான தேர்தல்களும் நடக்கப் போவதும் இல்லை. மாகாண சபைகளிடம் இருக்கும் ஒரு சில அதிகாரங்களும் பறிக்கப்படுகின்றன." - என்றார்.

## தந்தையின் மரணச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளின் பின்னால் சென்ற ரந்திக பியூமல் கமகே என்ற (வயது 21) இளைஞரே உயிரிழந்துள்ளார்.

இவர் உயிரிழந்த தனது தந்தையின் மரணச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக வேகமாக புலத்சிங்களவில் இருந்து ஹொரணைக்குப் பயணித்துள்ளார்.

இவ்வாறு பயணித்தபோது கீழ் நரகல பள்ளத்தாக்குக்கு அருகில் உள்ள வளைவில் மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகில் உள்ள மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது என்று புலத்சிங்கள பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவரும் காயமடைந்து ஹொரண வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

புலத்சிங்கள பொலிஸ் நிலையப் பிரதான பொலிஸ் பரிசோதகர் சந்தன விதானகேவின் பணிப்புரையின் பேரில், போக்குவரத்துப் பிரிவின் நிலைய கட்டளைத் தளபதி பிரதி பொலிஸ் பரிசோதகர் செனவிரத்ன உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் குழு இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பொருளாதாரக் கொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சீரழிவுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களைச் சட்டத்துக்கு முன் கொண்டுவந்தோம்.

அதற்காக எங்களுக்கு முன்னாள் சிறந்த மூன்று புத்திஜீவிகள், திறமையான சட்டத்தரணிகளும் இருந்தனர். நாட்டை வங்குராத்து நிலைக்குக் கொண்டு சென்றவர்களைச் சட்டத்துக்கு முன்னால் கொண்டு செல்ல வேண்டும் என நாங்கள் தொடர்ந்து தெரிவித்து வந்தோம். என்றாலும் தற்போது உயர் நீதிமன்றம் இது தொடர்பாக வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பொன்றை வழங்கியுள்ளது.

அதாவது இந்த நாட்டில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி நாட்டில் பேரழிவை ஏற்படுத்தியமைக்கு யார் பொறுப்புக்கூற வேண்டும் என்பதை உயர்நீதிமன்றம் பெயர் குறிப்பிட்டு தீர்ப்பளித்திருக்கின்றது.

நாட்டை வங்குரோத்து அடையச் செய்தது யார் என்பது தொடர்பாக கருத்தாடல்கள் இடம்பெற்று வந்திருந்தன. என்றாலும் இந்தப் பொருளாதார வங்குரோத்து நிலைக்கு யார் காரணம் என்பதை உயர்நீதிமன்றம் தெளிவாகப் பெயர் குறிப்பிட்டு தெரிவித்திருக்கின்றது.

எனவே, நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்து பொருளாதாரக் கொலைகாரர்களாக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பவர்களே இந்த நிலைக்குக் காரணமாகும்.

ஒட்டுமொத்த சமூகமும், ஒவ்வொருவரும், வங்குரோத்து தன்மையால் வாழ்வாதாரம் அழிந்த தரப்பினர் போன்றவர்கள், பொருளாதார அழிவின் காரணமாக தங்களுக்கு ஏற்பட்ட பாராபட்சத்துக்கு இந்த நபர்களிடம் இழப்பீடு கோரலாம்.

எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு நீதிமன்றத்தைப் பயன்படுத்தி, நாட்டின் பொருளாதாரக் கொலைகாரர்கள் யார் என்பதை நிரூபிக்க முடிந்துள்ளது. இதனை வெளிப்படுத்தக் காரணமான ஐக்கிய மக்கள் சக்தியின் புத்திஜீவிகள் பேரவை மற்றும் சட்டத்தரணிகளுக்கு தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்." - என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## குரூரம் அரங்கேறிய நாள்

மலையக சகோதரர்கள் இலங்கைக்கு வந்து இரு நூறு ஆண்டுகளைக் கொண்டாடும் இச் சமயத்திலே, நேற்றைய தினம் - நவம்பர் 15 ஆம் திகதி - அவர்களின் வரலாற்றில் பெரும் கரும்புள்ளியை ஏற்படுத்திய நாளாகக் கடந்து சென்றிருக்கின்றது.

ஆம். சரியாக 75 ஆண்டுகளுக்கு முன்னர் - 1948 நவம்பர் 15 ஆம் திகதி - கொண்டு வரப்பட்ட குடியுரிமைச் சட்டம்தான் அந்த மலையக மக்களில் அரைவாசிப் பேரை - சுமார் 10 லட்சம் சகோதர, சகோதரிகளை நாடற்றவர்களாக்கி, இலங்கையை விட்டு வெளியேற்றியது.

இலங்கைத் தீவு பிரிட்டிஷ் தரப்பிடமிருந்து சுதந்திரம் அடைந்ததாகக் கூறப்படும் நாளில் இருந்து, ஒன்பது மாதத்துக்குள், சிங்கள - பௌத்த பேரினவாதக் கொடூரம் தனது இன வெறி அட்டூழியத்தை அப்பட்டமாக உலகுக்கு அம்பலப்படுத்திக் காட்டிய நாள் இது தான்.

பின் நாள்களில் மற்றைய சிறுபான்மையின ரான ஈழத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகியோருக்கு எதிராகவும் இதே பேரின வாத வெறித்தனமே கட்டவிழும் என்பதற்கு அச்சாரம் கூறிய நிகழ்வு 1948 நவம்பர் 15 அன்றுதான் அரங்கேறியது.

இலங்கைத் தீவு சுதந்திரம் அடைந்ததாகத் தெரிவித்து, பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியா ளர்களிடமிருந்து அரசியல் அதிகாரம் சிங்களப் பெரும்பான்மையரிடம் கைமாறிய போது, சிங்கள - பௌத்த பேரினவாத வெறி மேலாண்மை பெற்றது. குரூர வடிவம் எடுத் தது. கொடூரப் பண்பியல்புகளை வெளிப் படுத்தியது. அரச அடக்குமுறை சிறுபான் மையினருக்கு எதிராக ஈவிரக்கமற்ற போக்கை மேற்கொண்டது.

இந்த அரச ஒடுக்குமுறை முக்கால் நூற் றாண்டு காலத்துக்கு மேலான சரித்திர நீட்சியைக் கொண்டது.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின் னர், மாறி மாறி ஆட்சி பீடம் ஏறிய சகல பௌத்த - சிங்களப் பேரினவாத அரசுகளும் ஒன்றுக்குப் போட்டியாக மற்றது இன அடக்கு முறையையே தங்களின் பிரதான கொள்கைப் போக்காகவும், இலட்சிய மாகவும் வரித்து, அதன்படியே செயற் பட்டன. செயற்படுகின்றன.

சிறுபான்மையினரின் தேசிய வாழ்வுக்கு ஆதாரமான - அத்தியாவசிய - அடித்தளங் களைத் தேடித் தகர்த்துவிடும் நாசகாரத் திட்டமாகவே இந்தப் பேரினவாத ஒழுங்கு முறை முன்னெடுக்கப்படுகிறது.

சிங்கள - பௌத்த பெரும்பான்மையின ரின் கொடுங்கோன்மைத் தளமாக - மைய மாக - நாடாளுமன்றமே விளங்கியது. விளங்குகின்றது.

இனவாதம் அரசோச்சிய அந்தத் தளத் தில்தான் சிறுபான்மை இனங்களுக்கு எதி ரான அடக்குமுறைச் சட்டங்கள் யாக்கப் பட்டன.

அந்தக் கொடூர இனவாதத் தாக்குதலில் முதல் களப் பலியானவர்கள் நம் மலையகத் தமிழ்ச் சகோதர, சகோதரிகளே.

இந்தத் தீவின் சுபீட்சத்துக்காக வேர்வை யும் இரத்தமும் சிந்தி, உயிரையும் அர்ப் பணித்து, ஓடாய்த் தேய்ந்து, மாடாய் உழைத்து, ஒன்றேகால் நூற்றாண்டுகளாக அரும்பணியாற்றிய ஓர் இனத்தின் சந்த தியில் பத்து லட்சம் பேர் இந்த மோசமான நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மிகக் கொடுமையான சட்டத்தின் மூலம் இலங்கைப் பிரஜாவுரிமை மறுக் கப்பட்டு, நாடற்றவர்கள் ஆக்கப்பட் டனர்.

அதன் 75 ஆவது ஆண்டு நிறைவை, மலை யக மக்களின் வருகையின் 200ஆவது ஆண்டுக் கொண்டாட்டத்தில் நாம் மறந்து போனமை இன வெறி அடக்குமுறை ஆட் சியாளர்களுக்கு ஒரு வெற்றிதான்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

"மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வரட்சி, நோய்கள், பனிச் சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப்பெருக்குக ளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள் களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை."



- ஜோன் மூர் (அமெரிக்க இயற்கையியலாளர்)

## 240 கோடி ரூபா நஷ்டஈடு கேட்டு

# விளையாட்டுத்துறை அமைச்சருக்கு எதிராக ‘இலங்கைக் கிரிக்கெட்’ நிறுவனம் வழக்கு!

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவிடமிருந்து 240 கோடி ரூபா நஷ்டஈடு கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தாக்கல் செய்துள்ளது என இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக இலங்கைக் கிரிக்கெட் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர், உப தலைவர் மற்றும் பொருளாளர் ஆகியோர் இந்த வழக்கின் மனுதாரர்களாக உள்ளனர்.

விளையாட்டுத்துறை அமைச்சரின் அறிக்கைகள் இலங்கை கிரிக்கெட்டின் நன்மதிப்பை உள்ளூரிலும் சர்வதேச அளவிலும் களங்கப்படுத்தியுள்ளன என மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் காசா நிலைமை பற்றிய கலந்துரையாடல்










(சப்னா றிபாஸ்)

பலஸ்தீனின் காசாவில் இடம்பெறுகின்ற போர்க்குற்றங்கள், ஆயிரக்கணக்கான அப்பாவிக் குழந்தைகள் மற்றும் மக்களைல் கொன்று குவிப்பதைத் தடுப்பதில் உலகத் தோல்வியின் தாக்கங்களும் அதனுடன் உலகின் பிற பகுதிகளுக்கு ஏற்பட்டுள்ள அழுத்தங்களும் தொடர்பான கலந்துரையாடல் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் நேற்று இடம்பெற்றது.

“பலஸ்தீன விவகாரத்தில் உலகின் தோல்வியும்: கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களும்” எனும் தலைப்பில் போரத்தின் தலைவர் என்.எம்.அமீன் தலைமையில் இலங்கை தபாலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் எம்.எச். செய்ட், இலங்கை ஐ.நா. அலுவலக முன்னாள் தேசிய தகவல் அதிகாரி மொஹான் சமரநாயக்க, சமூக ஆர்வலர் எம்.என் முஹம்மட் ஆகியோர் விசேட பேச்சாளர்களாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

## தோட்டத் தொழிலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறிய தாவது:–

“பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா தான் வழங்கப்படுகின்றது. மாதம் 20 ஆயிரம் ரூபாவரையே வருமானம் பெறுகின்றனர். நான்கு பேர் கொண்ட குடும்பமொன்றுக்கு மாதச் செலவுக்க 83 ஆயிரம் வரை தேவைப்படுகின்றது என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால், மூன்று வருடங்களாகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள அதிகரிப்பு இல்லை. ஆனால், வாழ்க்கை செலவு மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. தேயிலை ஏற்றுமதி அதிகரித்தாலும் அதன் மூலம் தொழிலாளர்களுக்கு நன்மை கிடைப்பதில்லை. பெருந்தோட்டப்பகுதிகளில் 70 சதவீத மானோர் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றனர்.

எனவே, அரச ஊழியர்களுக்கு வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்ட 10 ஆயிரம் ரூபா வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு எமது மக்களையும் சென்றடைய வேண்டும். அதாவது நாள் சம்பளத்துடன் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவாக 500 ரூபாவை இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அப்போது 20 நாள்களுக்கு 10 ஆயிரம் ரூபா கிடைக்கப்பெறும். நிறுவனங்களுடன் பேசி இதற்கான பொறிமுறையை அரசு உருவாக்க வேண்டும்.” – என்றார்.

## துப்பாக்கிச் சூட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நடத்திய துப்பாக்கிச்சூட்டிலே அந்த நபர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துக்கான காரணம் இதுவரையில் வெளியாகவில்லை.

அதேவேளை, உயிரிழந்தவரின் அடையாளமும் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை என்று பொலிஸார் நேற்றிரவு தெரிவித்துள்ளனர்.

# உத்தராகண்ட் சுரங்கப் பாதை விபத்து:

# 40 பேரை மீட்பதில் தாமதம்: உறவினர்கள் போராட்டம்!







உத்தரகண்ட் மாநிலத்தில் சுரங்கப் பாதை அமைக்கும் திட்டத்தில் ஈடுபட்டிருந்த போது, மண்சரிவு ஏற்பட்டதால் 40 தொழிலாளர்கள் சுரங்கத்திற்குள் சிக்கியுள்ளனர்.

அவர்கள் சுரங்கத்திற்குள் சிக்கி 96 மணித்தியாலங்களை அண்மித்துள்ள போதிலும், அவர்களில் எவரும் இதுவரை மீட்கப்படவில்லை.

இதனால், சுரங்கத்திற்கு வெளியில் அவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உத்தரகண்ட் மாநிலத்தின் உத்தர காசி மாவட்டத்தின் யமுனோத்ரி தேசிய நெடுஞ்சாலையில் சில்க்யாரா, தண்டல்கான் பகுதிகளுக்கு இடையே சுரங்கப் பாதை அமைக்கப்பட்டு வருகிறது.

அந்தப் பாதையின் ஒரு பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மண் சரிவு ஏற்பட்டது. இதனால் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்பட்டு வந்த சுரங்கப்பாதை சரிந்து விபத்திற்குள்ளானது.

பாதை சரிந்து இடிபாடுகள் குறுக்கில் இருப்பதால், அவற்றின் பின்னால் 40 தொழிலாளர்கள் சிக்கிக்கொண்டு வெளியேற முடியாமல் தவித்து வருகின்றனர். சரிவுக்குள்ளான பகுதி 30 மீட்டர் நீளமானது என்று உத்தரகண்ட் மாநில அவசரகால செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

வெளிவரும் பாதையை தயார் செய்வதற்காக இயந்திரங்களை பயன்படுத்தி இடிபாடுகளை துளையிடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும், நேற்று மாலை அந்த இயந்திரங்களும் சிக்கிக்கொண்டதால், அப்பணி இடைநிறுத்தப்பட்டது.

இந்த நிலையில், தொழிலாளர்களை மீட்பதற்கு மீட்புப் படையினரிடம் மாற்றுத் திட்டங்கள் இல்லை என போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், போர்க்கால அடிப்படையில் மீட்பு பணிகள் விரைந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இராட்சத இயந்திரங்களை பயன்படுத்தி, இடிபாடுகளை அகற்றி வருவதாகவும் உத்தரகண்ட் மாநில பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளே சிக்கி இருப்பவர்களுடன் தொடர்பில் இருப்பதாகவும் அவர்கள் அனைவரும் பாதுகாப்பாக மீட்கப்படுவார்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

பாதையில் உள்ள இடிபாடுகளை அகற்றினாலும், மேலிருந்து அதிகளவில் மண்சரிவு ஏற்படுவதால் மீட்பு பணிகள் தாமதமாகி வருகின்றன.

# மத்தியப் பிரதேச மாநிலத்தின் வளர்ச்சிக்கான தொலைநோக்குத் திட்டம் காங்கிரஸிடம் இல்லை

## - பிரதமர் மோடி விமர்சனம்

மத்தியப் பிரதேசத்தை வளர்ச்சி அடையச் செய்வதற்கான தொலைநோக்குத் திட்டம் எதுவும் காங்கிரஸ் கட்சியிடம் இல்லை என்று பிரதமர் நரேந்திர மோடி விமர்சித்துள்ளார்.

மத்தியப் பிரதேசத்தில் நாளை தேர்தல் நடைபெற உள்ளது. இந்த நிலையில், நேற்று இறுதிக்கட்டத் தேர்தல் பிரச்சாரம் தீவிரமாக நடைபெற்றது.

தலைநகர் போபாலில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றுகையில்,

"காங்கிரஸ் கட்சியின் வாரிசு அரசியல் மற்றும் எதிர்மறை அரசியலைப் பார்த்து மத்தியப் பிரதேச மக்கள் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். மத்தியப் பிரதேசத்தை வளர்ச்சி அடையச் செய்வதற்கான தொலைநோக்குத் திட்டம் காங்கிரஸ் கட்சியிடம் இல்லை.

மத்தியப் பிரதேசத்தின் வாக்காளர்களிடம் நான் கோரிக்கை வைக்கிறேன். பா.ஜ.கவை தேர்ந்தெடுங்கள் தாமரைச் சின்னத்துக்கு வாக்களியுங்கள். மத்தியப் பிரதேசம் வளர்ச்சி அடைவதை நீங்கள் காண்பீர்கள். அதோடு, இந்தியாவும் வளர்ச்சி அடையும். மத்தியப் பிரதேச தேர்தல் பிரச்சாரம் இம்முறை மிகவும் சிறப்பானதாக இருந்தது.

அ.தி.க. அளவில் வாக்காளர்களின் ஆசீர்வாதம் பா.ஜ.கவுக்கு இருப்பதை பார்க்க முடிந்தது. மாநிலத்தின் ஒவ்வொரு மூலைக்கும் நான் சென்றுள்ளேன். ஏராளமான மக்களிடம் பேசி உள்ளேன். பா.ஜ.க. மீது அவர்கள் கொண்டுள்ள நெருக்கத்தை என்னால் உணர முடிந்தது. மக்களின் ஆசீர்வாதம்தான் பா.ஜ.கவின் மிகப் பெரிய சொத்து.

இந்தத் தேர்தலில், பெண்கள் அதிக அளவில் பா.ஜ.கவின் கொடியை தங்கள் கைகளில் ஏந்தி இருந்தனர். பா.ஜ.கவுக்கு ஆதரவு அளிக்க பெண்கள் முடிவு செய்துவிட்டனர்.

ஏனெனில், பெண்களின் முன்னேற்றம்தான் பா.ஜ. கவின் முன்னுரிமை. எனவே, மீண்டும் பா.ஜ.க. வரவேண்டும் என்பதில் பெண்கள் உறுதியாக உள்ளனர். இதேபோல், இந்தியாவின் அடுத்த 25 ஆண்டுகள் மிகவும் முக்கிய மானவை.

இந்த ஆண்டுகள் இளைஞர்களுக்கானதாக இருக்க வேண்டும். இந்தியாவை வளர்ச்சி அடையச் செய்வதற்கும், அதன் பலனை பெறுவதற்கும் இந்த 25 ஆண்டுகள் மிகவும் முக்கியம் என்பதால், நமது இளைஞர்கள் இதில் கவனமாக இருக்கிறார்கள் என்று தெரிவித்துள்ளார்.

# காசாவில் ஹமாஸ் நாடாளுமன்றத்தை இஸ்ரேல் இராணுவம் கைப்பற்றியது!



காசாவில் தரைவழியாக முன்னேறும் இஸ்ரேல் இராணுவம் ஹமாஸ் நாடாளுமன்ற கட்டடத்தை கைப்பற்றியுள்ளது.

பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் உள்ள ஹமாஸ் அமைப்பினர், இஸ்ரேல் மீது கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி ரொக்கெட் குண்டு வீச்சு தாக்குதலை நடத்தினர். அதன்பின் தரைவழியாகவும், வான் வழியாகவும், இஸ்ரேல் பகுதிக்குள் ஊடுருவிய ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலியர்கள் 1,200 பேரை கண்மூடித்தனமாக சுட்டுக் கொன்றனர். 239 பேரை காசா பகுதிக்குள் கடத்திச் சென்றனர்.

இதனால், இஸ்ரேல் இராணுவம் காசாவின் வட பகுதியில் வான்வழித் தாக்குலில் ஈடுபட்டது. கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக நடந்த தாக்குதலில் காசாவில் 11 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதனால் காசாவின் வட பகுதியில் சுமார் 15 லட்சம் பேர் இடம்பெயர்ந்து காசாவின் தென் பகுதிகளில் உள்ள நிவாரண முகாம்களில் தங்கியுள்ளனர்.

காசா எல்லையில் பீரங்கி வாகனங்களுடன் காத்திருந்த இஸ்ரேல் இராணுவம், காசாவின் வட பகுதியில் கடந்த மாதம் 27 ஆம் திகதி ஊடுருவியது. இஸ்ரேல் விமானப்படை ஹமாஸ் அமைப்பினரின் இருப்பிடங்களில் குண்டு மழை பொழிய, இஸ்ரேல் தரைப்படை படிப்படியாக முன்னேறி, ஹமாஸ் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளை கைப்பற்றி வந்தது.

காசாவின் மருத்துவமனைகளில் பதுங்கியிருந்த ஹமாஸ் அமைப்பினரையும் இஸ்ரேல் இராணுவத்தினர் வேட்டையாடினர். காசாவில் உள்ள முக்கிய மருத்துவமனையான அல்-குத் மருத்துவமனைக்கு வெளியே ரொக்கெட் லோஞ்சர்களுடன் பாதுகாப்பு பணியில் இருந்த ஹமாஸ் அமைப்பினர் 24 பேரை இஸ்ரேல் இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர்.

ஹமாஸ் அமைப்பின் உளவுப்பிரிவுத் தலைவர் காமிஸ் தபாபாஸ், சிரேஷ்ட தளபதி தஷின் மஸ்லாம் உட்பட ஹமாஸ் படையின் முக்கிய அதிகாரிகள் அனைவரையும் இஸ்ரேல் இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர்.

ஹமாஸ் கட்டுப்பாட்டில் இருந்த நாடாளுமன்ற கட்டடத்தையும், இஸ்ரேல் இராணுவத்தினர் கைப்பற்றி உள்ளே புகுந்தனர். காசாவின் வடபகுதியில் ஹமாஸ் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த அனைத்து முக்கிய பகுதிகளும் இஸ்ரேல் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டது.

இதேவேளை, காசா நகரத்தில் உள்ள அல்-ஷிபா மருத்துவமனையில் மின்சாரம், எரிபொருள், குடிநீர், அத்தியாவசிய மருந்துகள் என அனைத்துக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், நோயாளிகள் பெரும் இன்னலுக்கு ஆளாகியுள்ளனர்.

குறிப்பாக, எடை குறைந்த குழந்தைகளை காப்பாற்றுவதற்கு இன்குபேட்டர் வசதி மிகவும் அத்தியாவசியமானதாகும். ஆனால், மின்சாரம் இன்றி அவற்றின் செயல்பாடு முடங்கியுள்ளதால் குழந்தைகளை வெளியில் எடுத்து வைக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் ஒவ்வொரு மணி நேரத்துக்கும் குழந்தைகளின் இறப்பு எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என மருத்துவர்கள் வேதனையுடன் தெரிவித்துள்ளனர்.

இதுதவிர, 7 குழந்தைகள் உட்பட 179 உடல்கள் ஒரே இடத்தில் குழிதோண்டி புதைக்கப்பட்டன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கும் சீன ஜனாதிபதிக்கும் இடையில் சந்திப்பு



நேற்று அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்ற ஆசிய-பசிபிக் பொருளாதார ஒத்துழைப்புக் கூட்டத்தில் (எபெக் உச்சிமாநாட்டில்) அமெரிக்க அதிபர் ஜோ பைடன் மற்றும் சீன அதிபர் ஜி ஜின்பிங் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் சந்தித்தனர். 2021இல் ஜோ பைடன் பதவியேற்ற பின்னர் இரண்டாவது முறையாக இரு தலைவர்களும் சந்திக்கின்றனர்.

தைவான் பிரச்சினை, வர்த்தக பதற்றங்கள் மற்றும் பொருளாதாரத் தடைகள் காரணமாக அமெரிக்கா – சீனா இடையேயான உறவு பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்தச் சந்திப்பு நிகழ்ந்தது.

தற்போது இஸ்ரேல் – ஹமாஸ் போர், ரஷ்யா – உக்ரைன் போர்களுக்கு மத்தியில் இந்தச் சந்திப்பு நடந்ததால் இது கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது.



# சுழிபுரம் பெரிய தம்பிரான் வீதி மீளவும் வெள்ளத்தில் மூழ்கியது

முறையான வடிகால் அமைப்பு இன்றி வீதியில் தேங்குகின்ற வெள்ளத்தினால் சுழிபுரம் பெரிய தம்பிரான் வீதி முழுமையாக நீரில் மூழ்கியுள்ளது.

தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் இவ்வாறு மழை வெள்ளம் காரணமாக இந்த வெள்ளப்பெருக்கு பதிவாகி வருகின்றது. இதுவரை வலிகாமம் மேற்கு பிரதேச சபையினர் இந்த வடிகால் அமைப்பிற்கு என ஒரு முறையான திட்டத்தை நடைமுறைப்படுத்தவில்லை எனப் பொதுமக்கள் குற்றம் சுமத்தி உள்ளனர்.

குறிப்பாக பாண்டவெட்டை, காட்டுபுலம், வறுத்தோலை, இறாத்தலடி உட்பட பல பகுதிகளுக்கு இவ்வீதி பிரதான போக்குவரத்துப் பாதையாகக் காணப்படுகின்றது. மேலும் பாடசாலை, பாலர் பாடசாலை என முக்கியமான பகுதிகளும் காணப்படுகின்றன.

இந்நிலையில் பாடசாலை மாணவர்கள் தமது புத்தக பை நனையும் நிலையில் இந்த வீதியில் பயணிக்கின்றமையை அவதானிக்க முடிகிறது.

இந்த வீதியின் ஆரம்பத்தில் சிறிய வடிகால் காணப்படுகின்றது. அதனை முறையாகத் தூர்வாரி இந்த வீதியின் வெள்ளத்தை தற்காலிகமாகவேனும் அகற்ற உடனடி நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# விற்றாசை இழுத்த இளைஞன் அதன் கூர் முனை குத்தி சாவு!

## புத்தளத்தில் நேற்றுச் சம்பவம்

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் நகரில் உள்ள அரச திணைக்களம் ஒன்றுக்கு சொந்தமான விடுதியொன்றில் இருந்து இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புத்தளம் நகரைச் சேர்ந்த மரிய தாஸ் கிருஷாந்த (வயது 23) எனும் இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இளைஞன் இன்று காலை 6 மணிக்கும் 6.30 க்கும் இடைப்பட்ட நேரத்தில் அரச திணைக்களம் ஒன்றுக்குச் சொந்தமான விடுதியிலுள்ள குளியலறையில் வைத்து விற்றாசை கையில் எடுத்து தனது இரண்டு கைகளினாலும் நேராக இழுக்க முற்பட்ட போதே இந்தத் துயர சம்பவம் இடம்பெற்றுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்ததாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

தனது இரண்டு கைகளாலும் தனது சக்தியை பயன்படுத்தி விற்றாசை இழுத்த போது, அந்தத் தராசின் முன் பக்கமாக உள்ள கூர்மையான பகுதி இளைஞனின் கழுத்தில் குத்தி கடுமையாக காயப்படுத்தியுள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

அந்த இளைஞன் குளியலறையில் இரத்தக் காயங்களுடன் காணப்பட்டமையை அடுத்து, அங்கிருந்த குடும்பத்தினர் அந்த இளைஞனை உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையில் சேர்த்த போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது., சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸாரும், பொலிஸ் தடயவியல் பிரிவினரும் அங்கு விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அத்துடன், புத்தளம் மாவட்ட பதில் நீதிவான் எம்.எம்.இக்பால், சம்பவம் இடத்திலும், வைத்தியசாலையிலும் நீதிவான் விசாரணையை நடத்தினார். பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை தந்தையிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# டக்ளஸை அவரின் அமைச்சில் சந்தித்து செல்வம் உரையாடல்

மன்னார், கோந்தைப்பிட்டிப் பகுதியில் அமைந்துள்ள மீன்பிடி இறங்குதுறை தொடர்பாகவும், மன்னாரில் கடலட்டை பிடிப்பில் ஈடுபடுபவர்களுக்கான அனுமதிகள் தொடர்பாகவும் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு கடற்றொழில் அமைச்சில் நேற்று இடம்பெற்றது. இச்சந்திப்புத் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தவை வருமாறு:-

மன்னார், கோந்தைப்பிட்டி இறங்குதுறைப் பகுதியில் அமைந்துள்ள இறங்குதுறை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இதனையடுத்து கடற்றொழிலாளர்கள் தடைகளின்றி தமது செயற்பாடுகளை முன்னெக்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகா-ரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளேன்.

மன்னாரில் கடலட்டை பிடிப்பவர்களுக்கான அனுமதி தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. கடலட்டை பிடிப்பில் ஈடுபடுவதற்கான அனுமதி தொடர்பாக கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் கலந்துரையாடுமாறு தெரிவித்தேன். - என்றார்.

# பட்டப்பகலில் நகைக்கடையில் நகையை அபேஸ் செய்ய முயன்ற கும்பல் சிக்கியது!

## மருதமுனை மக்களால் மடக்கிப் பிடிப்பு

(எம்.எம்.றம்ஸீன்)

கல்முனை, மருதமுனை பிரதேசத்தில் பிரபலமான நகைக்கடையொன்றில் நகைக்கடை உரிமையாளர் தனிமையில் இருந்த வேளை கறுப்பு நிறக் காரில் வந்த நகை வாங்குவதாகக் கூறிக்கொண்டு கடைக்குள் நுழைந்த 3 பெண்கள் மற்றும் இரண்டு ஆண்கள் அடங்கிய திருட்டுக் கும்பலை மருதமுனை மக்கள் மடக்கி பிடித்த சம்பவம் ஒன்று கல்முனைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதமுனைப் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இவர்கள் சாந்தமருது மற்றும் சம்மாந்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளிலிருந்து தெரிய வருகின்றது.



தனிமையில் இருந்த வயதான நகைக்கடை உரிமையாளரிடம் நகையைப் பெற்றுக்கொண்டு இக்குழுவினர் ஓட முற்பட்டவேளை, மருதமுனை பிரதேச மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். கொள்ளையிடப்பட்ட நகைகள் மற்றும் கொள்ளைக்காக பயன்படுத்தப்பட்ட கார் என்பனவும் கல்முனை பொலிஸ் பிரிவிற்குள்ளடங்கும் மருதமுனை பொலிஸாரிடம் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# ரணிலின் 150 கோடி ரூபா ஒதுக்கீடு போராடும் தாய்மாருக்கான லஞ்சமே

## வவுனியாவில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் சீற்றம்



ரணிலின் திட்டங்களில் நாம் சிக்கிக் கொள்ளாது இருத்தல் வேண்டும். 150 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு மூலம் இராணுவமும், ராஜபக்ஷக்களும் இனப் படுகொலை செய்த குற்றவாளிகள் என்பதை ரணில் ஏற்றுக் கொள்கிறார் எனத் தமிழர் தாயக காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கச் செயலாளர் கோ. ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

காணாமலாக்கப்பட்ட தமிழ் குழந்தைகளைக் கண்டறியவும், எதிர்கால இனப்படுகொலையில் இருந்து தமிழர்களைக் காப்பாற்றவும் தமிழ் இறையாண்மைக்காகவும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவிகளை பெறுவதற்கான தொடர்ச்சியான போராட்டத்தின் 2,460 நாளாக வவுனியா பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் முன் ஏ-9 வீதியில் போராட்டத்தில் ஈடுபடும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்ட பின்னர் இவ்வாறு தெரிவித்தனர். தொடர்ந்து கருத்து தெரிவித்த ராஜ்குமார் கூறியவை வருமாறு:-

150 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு மூலம் இராணுவமும் ராஜபக்ஷக்களும் இனப்படுகொலை செய்த குற்றவாளிகள் என்பதை ரணில் ஏற்றுக் கொள்கிறார். ஒப்புக் கொள்கின்றார். 150 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு பாதிக்கப்பட்ட தமிழ்த் தாய்மார்களுக்கு ரணிலின் லஞ்சம்.

சமீபத்திய வரவு - செலவுத் திட்ட அறிவிப்பில், காணாமலாக்கப்பட்டவர்களுக்காக ரணில் 150 கோடி ரூபா நிதியைவொதுக்கினார். அது தோராயமாக நான்கரை இலட்சம் அமெரிக்க டொலர்களாகும். எவ்வாறாயினும், இந்தத் தொகையைக் கொண்டும் கொழும்பு-7 கறுவாத்தோட்டத்தில் ஒரு அடுக்குமாடி குடியிருப்பை கூட வாங்க முடியாது.

இது ஒரு மூடிமறைப்பு. தாய்மார்களாகிய நாங்கள் அரசாங்கத்திடம் நிதி உதவியை நாடவில்லை. எங்கள் குழந்தைகளின் இருப்பிடம் குறித்து கண்டறிவதே எங்கள் முதன்மையான கவலை. கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் இருந்து 12 முதல் 18 வயது வரையிலான சிறுவர், சிறுமிகளை இலங்கை இராணுவமும், தமிழ் துணை இராணுவக் குழுக்களும் கடத்திசென்றுள்ளனர்.

இந்த இளைஞர்கள் பாலியல் அடிமைகளாக விற்கப்பட்டும், அடிமைத் தொழிலுக்கு தள்ளப்பட்டனர் எனவும் அமெரிக்கத் தூதர் ராபர்ட் பிளேக் கூறியுள்ளார். பிளேக் அமெரிக்க வெளியுறவுத் துறைக்கு அனுப்பிய கேபிளின் பதிவு எம்மிடம் உள்ளது.

இலங்கையில் எஞ்சிய சில தமிழ் குழந்தைகள் பிக்குகளாக (பௌத்த பிக்குகள்) நிர்பந்திக்கப்பட்டனர். மற்றவர்கள் சிங்கள தம்பதிகளால் தத்தெடுக்கப்பட்டனர்.

எம்மை ஏமாற்றும் ரணிலின் முயற்சி வெற்றியடையாது. காணாமலாக்கப்பட்ட எமது பிள்ளைகளை கண்டறிவதற்காக கைது செய்யும் அதிகாரத்துடன் கூடிய நம்பகமான சர்வதேச விசாரணையை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

சிங்கள அரசியல்வாதிகள் மீதும் அவர்களின் நீதித்துறை மீதும் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. இலங்கையின் நீதித்துறையின் செயற்பாடுகள் பற்றி அறிந்துகொள்ள நீங்கள் ஆர்வமாக இருந்தால், நீதிபதி சரவணராஜாவைத் தேடி, அவரிடம் கேளுங்கள்.

இராணுவம், பொலிஸ், சிங்கள அரசியல்வாதிகள், சிங்களக் குண்டர்கள் மற்றும் அரசாங்கத்தினால் மிரட்டப்பட்ட நீதிபதி சரவணராஜா தனது பாதுகாப்புக்கு பயந்து தீவை விட்டு வெளியேறினார். தற்போது, அவர் இருக்கும் இடம் யாருக்கும் தெரியவில்லை.

ரணில் நம்பத்தகுந்தவர் அல்லர். ஒரு பைசாக்குக் கூட விலை மதிப்பு இல்லாதவர். அவர் சதிக் கோட்பாடுகளை நம்புபவர். மற்றும் எவராலும் நம்பத்தகாதவர். அவர் தனக்குள் இருக்கும் குணத்தை வெளிப்படுத்தும் விளையாட்டாக இதை முன்வைக்கிறார். ஆனால் அவரது உண்மையான எண்ணம் காணாமல் போன எங்களின் தமிழ் குழந்தைகளைக் கண்டறியும் எங்கள் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டத்தில் இருந்து நம்மை நிறுத்தும் முயற்சியே.

தமிழ்ப் புலிகளிடம் இருந்து கருணாவை பிரிக்கும் சதித்திட்டத்திற்குக் காரணமான ரணில் என்ற நபரை நாம் நன்கு அறிவோம். சுமந்திரனின் துணையுடன் தமிழர் தாயகத்தில் 1,000 விகாரைகள் அமைப்பதற்கான வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றியவரும் ரணில்தான்.

ரணில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பயன்படுத்தி 4,000 சிங்களக் குடும்பங்களை வவுனியா நெடுங்கேணியில் வெற்றிகரமாகக் குடியமர்த்தினார். மேலும், இலங்கையில் பௌத்தத்தை முதன்மையான மதமாக ஏற்றுக்கொள்ளுமாறு சுமந்திரன் மூலம் அவர் நாடாளுமன்றத்தில் இதனைப் பிரகடனப்படுத்தி உலகளாவிய விழிப்புணர்வை உறுதி செய்தார்.

மேலும், சுமந்திரனால் முன்மொழியப்பட்ட கொள்கையான "எக்கிய ராஜ்ஜ" என்ற கருத்தை அங்கீகரிக்க ரணில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு செல்வாக்கு செலுத்தினார். "எக்கிய ராஜ்ஜ" என்ற கருத்துக்குள் மறைமுகமாக சமஷ்டி மறைக்கப்பட்டுள்ளது என்று சுமந்திரனை கூற வைத்தவர் ரணில். கடைசியாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைக்க வேண்டாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ரணில் வற்புறுத்தி, தமிழ் தேசியக் கூட்டமைப்பை ஏற்று கொள்ள வைத்தவர் ரணில்.

"அலகை" அடிப்படையிலான சந்திரிகா - நீலனின் அரசமைப்புப் பிரேரணையை ரணில் எதிர்த்து, நாடாளுமன்றத்தில் எரித்தார். ரணில் மிகவும் திறமையாகத் திட்டமிடுபவர். நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவருடைய திட்டங்களில் நாம் சிக்கிக் கொள்ளாமல் இருப்பது முக்கியம். நம்மைப் பாதுகாத்துக் கொள்ள, அவர் சொல்வதையெல்லாம் நிராகரிக்க வேண்டும். இந்த மூலோபாயத்தைப் பயன்படுத்துவதன் மூலம், வரவிருக்கும் பேரழிவிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

தமிழருக்கு ஒரே தீர்வு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தை அணுகி உதவி பெறுவதுதான். - எனத் தெரிவித்தார்.



# எமக்கு நிதி வேண்டாம் எமக்கு நீதியே வேண்டும்!

## காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் திருமலையில் உறுதி

(எஸ்.கீதபொன்கலன்)

"நிதி வேண்டாம் நீதியே எமக்கு வேண்டும். இம்முறை வரவு - செலவுத் திட்டத்தின்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நஷ்ட ஈடாக 150 கோடி ரூபா ஒதுக்கப்பட்டமையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்." - என்று திருகோணமலை மாவட்ட கையளிக்கப்பட்டு,கடத்தப்பட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் சங்கத் தலைவி நாகேந்திரன் ஆஷா தெரிவித்தார்.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கென வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தினரால் நேற்றுத் திருகோணமலையில்நடத்தப்பட்டசெய்தியாளர் சந்திப்பின் போது சங்கத்தின் தலைவி கருத்துத்தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அவர் கூறியவை வருமாறு:-

"சர்வதேச விசாரணையே எமக்குத் தேவை. நிதி கோரி நாம் போராடவில்லை. நிதி எமக்குத் தேவையில்லை. நீதியே வேண்டும். வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளைத் தேடி சுமார் 14 ஆண்டுகளுக்கு மேலாக நாம் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றோம். இலங்கை அரசின் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. சர்வதேச விசாரணை ஒன்றே தேவை எனக் கூறியே நாங்கள் தொடர்ச்சியான போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

"சர்வதேச சமூகத்தின் பார்வையில் எங்களுடைய போராட்டம் பேசு பொருளாக மாறி உள்ள நிலையில் சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் விதமாக இம்முறை வரவு - செலவு திட்டத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக நிதி ஒதுக்கப்பட்ட விடயம் கண்டனத்துக்கு உரியது.

"யாழ்ப்பாணத்தில் இவ் வருடம் நடைபெற்ற பொங்கல்தின நிகழ்வின் போது இலங்கையில் எவரும் காணாமலாக்கப்படவில்லை என தெரிவித்த ஜனாதிபதி , இப்போது இந்த விடயம். தொடர்பாக நிதி ஒதுக்குகின்றார் எனத் தெரிவித்திருக்கின்றார். அப்படியானால் எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டிருப்பதனை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா என நாம் அவரிடம் வினவுகின்றோம்.

"வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம் தொடர்ச்சியாக எங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்காகவே போராடி வருகின்றோம். இந்நிலையில் எங்களுடைய போராட்டத்தை சிதைக்கும் வகையில் அதற்கு இழப்பீடு வழங்குவதாகக் கூறி சர்வதேச சமூகத்தை ஏமாற்றப் பார்க்கின்றனர்" - என்றார்.

# டெங்கு ஒழிப்புக் கடமைகளில் இருந்து பொதுசுகாதார பரிசோதகர்கள் விலகல்



டெங்கு ஒழிப்பு கடமைகளில் இருந்து பொதுசுகாதார பரிசோதகர்கள் விலகியுள்ளனர்.

போக்குவரத்துக் கொடுப்பனவு அதிகரிக்கப்படாமை உள்ளிட்ட பல்வேறு தொழில்சார் சிக்கல்களுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும் எனக் கோரி அவர்கள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த மாதம் 23 ஆம் திகதி முதல் இந்தச் சிக்கல்களுக்கு தீர்வு வழங்குமாறு கோரி பல்வேறு தொழிற்சங்க நடவடிக்கைகளை தாங்கள் முன்னெடுத்திருந்தனர் என இலங்கைப் பொதுசுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் ஷானக போபிட்டிய தெரிவித்துள்ளார்.



# முல்லைத்தீவு கொக்குதொடுவாயிலும் அத்துமீறி வாடி அமைத்து ஆக்கிரமிப்பு

## சிங்கள குடியேற்றமாகும் தமிழர் பிரதேசம்

**(சண்முகம் தவசீலன்)**

முல்லைத்தீவு கொக்குதொடுவாய் வடக்கு15ஆம் கட்டை பகுதியில் பெரும்பான்மை இனத்தை சேர்ந்த சிங்கள மீனவர்கள் அத்துமீறி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றார்கள். இதனால் அந்தப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபடும் தமிழ் மீனவர்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

புலிபாய்ந்தகல் பகுதியில் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த மீனவர்கள் அத்துமீறி வாடி அமைத்து தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை பிரதேச செயலகத்தினால் அறிவித்தல் வழங்கப்பட்டு, வாடிகளை அகற்றுமாறு கோரி பதாகை காட்சிபடுத்தப்பட்டு இருந்தது.

இந்நிலையில் கொக்குதொடுவாய் 15ஆம் கட்டை பகுதியில் இவர்கள் வாடி அமைத்து சட்டவிரோதத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இது தொடர்பாக உள்ளூர் மீனவர் சங்கத்தினர், கிராம அமைப்பினர் இணைந்து பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மீனவர்களிடம் பிரச்சினை தொடர்பாக நேரில் கேட்டபோது அந்த இடத்த்சிப் பெரும்பான்மையினத்தை சேர்ந்த பிக்கு ஒருவர் தந்த இடமாகவும், தாம் அதனை வாங்கி விட்டனர் எனவும் அதனாலேயே இங்கே வாடி அமைத்து தொழில் செய்கின்றனர் எனவும் கூறியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் முல்லைத்தீவு கடற்தொழில் திணைக்களத்திடம் அந்த மக்கள் தெரியப்படுத்தியிருந்த வேளை அத்துமீறி தொழில் செய்யும் போது தமக்கு அறிவித்தல் வழங்குமாறும், தாம் உடனடியாக அந்த இடத்திற்கு வருவார்கள் எனவும் கூறியிருந்தனர்.

ஆனால் இவ் விடயம் தொடர்பாக தொலைபேசியில் தகவல் வழங்கி இருந்தும் திணைக்களத்தினர் வருகை தரவில்லை எனவும் அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மைய காலங்களில் தொடர்ச்சியாக தமிழ் மீனவர்கள் தொழில் செய்து வரும் இடங்களை பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆக்கிரமித்து வருகின்றனர். முல்லைத்தீவு புலிபாய்ந்தகல், தண்ணிமுறிப்பு, கொக்குதொடுவாய் வடக்கு என இவ்வாறு தொடர்ச்சியாக அத்துமீறிப் பெரும்பான்மையின சிங்கள மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள்.







# இன்றைய ராசி பலன்கள் - 16.11.2023

## மேஷம்

சம்பிரதாய விழாக்கள் மற்றும் ஆன்மீக சொற்பொழிவுகளில் கலந்து கொள்வ தன் மூலம் ஆறுதல் மற்றும் நிவாரணம் கிடைக்கும். பிரார்த்தனை மேற்கொள்வ தன் மூலம் திருப்தி நிலவும்.

பணியிடத்தில் பதட்டம் காணப்படும். பணியிடத்தில் காணப்படும் கடினமான சூழ்நிலையை கையாள அனுசரணையான போக்கை மேற்கொள்ள வேண்டும். திட்டமிட்டு பணியாற்றுங்கள்.

உங்கள் துணையின் மீது தவறான கருத்து கொண்டி ருப்பீர்கள். இது உங்களுடைய உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். உங்கள் துணையுடன் நல்லுறவு காண சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பண இழப்பு ஏற்படாமல் தடுக்க நீங்கள் முன்கூட்டியே திட்டமிட வேண்டும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்ய வேண்டும்.

## ரிஷபம்

இன்று சற்று கடினமான சூழ்நிலைகள் காணப்படும். உங்கள் அணுகுமுறை யில் பொறுமை மற்றும் உறுதி அவசியம். உங்கள் அன்றாட நிகழ்வுகளில் விழிப்பு ணர்வு தேவை.

பணியிடத்தில் மிதமான பலன்கள் காணப்படும். அதிகப் பணிகள் கவலையை அளிக் கும். அதனால் பணிகளைக் கையாளும்போது கவனக் குறைவு ஏற்படும்.

உங்கள் துணையுடன் குடும்பப் பிரச்சினை ஒன்றை சந்திக்க நேரலாம். குடும்பத்தில் அமைதி மற்றும் நல்லிணக்கம் ஏற்பட ஒருவருக்கொருவர் மனம் திறந்து பேசிக் கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

கால் மற்றும் தொடைகளில் வலி ஏற்படலாம்.

## மிதுனம்

இன்று புதிய மனிதர்களுடன் கலந்துற வாடுவீர்கள். புதிய நண்பர்களை ஏற்படுத்திக் கொள்ள இது உகந்த நாள். அனுபவப் பூர்வமான பாடம் இதன் மூலம் கற்கலாம்.

உங்கள் கடின உழைப்பும் அர்ப்பணிப் பும் நல்ல பலனை பெற்றுத் தரும். உங்கள் நேர்மையான அணுகுமுறை காரணமாக பணியில் சாதிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை பகிர்ந்து கொள்வீர் கள். அதன் காரணமாக உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

பணபுழக்கம் அதிகமாக காணப்படும். உங்கள் குடும்பத் துடன் வெளியே செல்லுதல் போன்ற நிகழ்ச்சிகளுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## கடகம்

இன்று சௌகரியங்களை அனுப விக்கும் நாள். இன்றைய நாள் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும். இன்று மன வலிமை அதிகம் காணப்படும். குறைந்த முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர் கள். உங்களின் செயல் திறன் சக பணியாளர்களை ஆச்சரியப்பட வைக்கும்.

உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத் திக் கொள்வீர்கள். நீங்கள் இருவரும் நல்லுறவையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். இன்றைய நாளை நீங்கள் புதிய முதலீடுகள் செய்வதற்கு பயன்படுத் திக் கொள்ளலாம்.

இன்று உங்களிடம் காணப்படும் மன உறுதி காரண மாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## சிம்மம்

இன்று கடினமான சூழ் நிலை காணப்படும். அது உங்கள் நாளின் சீரான நிலையை பாதிக்கும். கவன முடன் செயலாற்ற வேண்டும். தனிமை உணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. அதனை சமாளிக்க வேண்டும். அமைதி பெற பிரார்த்தனை மேற்கொள்ளுங்கள்.

அதிகப் பணிகள் காணப்படும். நற்பலன்களைக் காண நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும்.

உங்கள் துணையிடம் கருத்து வேறுபாடு கொள்வீர்கள். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படுத்த அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் குடும்பத்திற்காக சில தேவையற்ற செலவுகள் செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். எனவே திட்டமிட்டுப் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்யுங்கள்.

## கன்னி

கடினமான சூழ்நிலைகளை கையாள பொறுமை அவசியம். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில்பணிகளை மேற்கொள் ளும்போது கடினமான சூழ்நிலை காணப்படும். சக பணியாளர்களுடன் நல்லுறவு பரா மரிப்பதிலும் சிக்கல்கள் காணப்படும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். இது உறவின் சமநிலை மற்றும் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். தேவை யற்ற செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் தாயின் உடல் நிலையில் பாதிப்பு காணப்படும். அதற்காக நீங்கள் பணம் செலவு செய்ய நேரும்.

## துலாம்

இன்று மன வலிமை நிறைந்து காணப்படும். எதிர்பாராத நன்மைகள் திருப்தியை அளிக்கும். விருந்தினர்கள் வருகை காரணமாக இன்று நீங்கள் உற்சாகமாக இருப்பீர்கள்.

பணியிடத்தில் உற்சாகமான வாய்ப்புகள் காணப்படும். பணியிடச் சூழல் இனிமை யாகவும் மகிழ்ச்சி கரமாகவும் காணப்படும்.

உங்கள் நேர்மையான அணுகுமுறை உங்கள் துணையை மகிழ்விக்கும். உங்கள் துணையிடம் உங்கள் அன்பை வெளிப்படுத்துவீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் பணவரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று திட ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

## விருச்சிகம்

உங்கள் இலக்குகளை அடைய இந்த நாள் அனுகூலமாக இருக்காது. அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் உங்களை வைத்திருப்பது நல்லது. இன்று திறமையாக செயலாற்ற அனுசரணையான அணுகுமுறை தேவை.

பணியில் சில தவறுகளை நீங்கள் செய்ய நேரலாம். இன்று பணியில் கவனம் மிகவும் அவசியம்.

சில கருத்து வேறுபாடு காரணமாக தவறான புரிந் துணர்வு காணப்படும். இதனால் உறவுப் பிணைப்பு சற்று பாதிப்படையும்.

இன்று நிதிநிலைமை அபாரமாக இருக்கும். கூடுதல் செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு அதிருப்தி அளிக்கும்.

இன்று உங்களிடம் பதட்டம் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.11.2023




நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்கநேரலாம். இன்றுஅசௌகரியமாக உணர்வீர்கள். பொறுமையாக இருப்பதன் மூலம் நன்மை அடையலாம்.

பணியில் நீங்கள் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும். பணியிடத்தில் உங்கள் திறமைகளை பயன்படுத்த இயலாத நிலை காணப்படும்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்ள இயலாது. எனவே பொறுமை மேற்கொள்ளுங்கள்.பேசுவதை தவிர்த்திடுங்கள்.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். பண இழப்பு காணப்படுகின்றது. எனவே கவனமாக பணத்தை கையாளவும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கண் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று தேவையில்லாமல் வாக்கு வாதத்தில்ஈடுபடுவீர்கள். இதுஉங்களுக்கு கவலையை அளிக்கும். அமைதியாக இருப்பது நல்லது.

அதிகப் பணிகள் காணப்படும். திறமையாகப் பணியாற்ற திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உங்கள் சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்காதது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையிடம் பொறுமையின்றி நடந்து கொள்வீர்கள். இதனால் கடுமையான விவாதங்கள் இருவரிடையே ஏற்படலாம். எனவே நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பண வரவு எதிர்பார்த்த அளவுக்கு காணப்படாது. தேவையற்ற செலவுகள் எழும். பணத்தை சாதுர்யமாக கையாள்வது கடினமாக இருக்கும்.




உங்கள் மனோதிடம் மற்றும் உற்சாகம் காரணமாக இன்று சிறந்த பலன்கள் கிடைக்கும். இன்று அனைத்து விதத்திலும் சிறப்பான நாள்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிபடுத்துவீர்கள். இதனால் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நல்ல பண வரவு காணப்படுகின்றது. உங்கள் கடின உழைப்பு காரணமாக ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் பண வரவு ஏற்படும்.

உங்களிடம் காணப்படும் மன திருப்தி மற்றும் மகிழ்ச்சி காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




புத்திசாலித்தனத்தை சரியான நேரத்தில் பயன்படுத்துவதன் மூலம் இன்று சாதகமான பலன்கள் கிட்டும். உறுதி மற்றும் சிறப்பான திட்டம் மூலம் உங்கள் இலக்குகளை அடைவீர்கள்.

உங்கள் சிறப்பான செயல்திறன் மூலம் பணியில் வெற்றி பெறும் நிலை காணப்படும். உங்கள் பணியின் மூலம் கூடுதல் நற்பலன்கள் பெறுவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். சிறந்த தொடர்பு கொண்டிருப்பீர்கள். இதனால் அன்பும் மகிழ்ச்சியும் பெருகும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். சிறப்பாக சேமிக்க இயலும். புதிய முதலீடுகள் லாபகரமாக இருக்கும்.

மன உறுதி காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். கடவுள் ஆசி இன்று உங்கள் பக்கம்.






# கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தன்னியக்கப் பொதி கையளிப்புக்கு ஒழுங்கு






கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தன்னியக்க பயணச்சீட்டு பரிசோதனை இயந்திரங்கள் மற்றும் பயணப்பொதி சோதனை இயந்திரங்கள் என்பன நிறுவப்பட்டுள்ளன.

பயணிகள் நெருக்கடியை தீர்க்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் விமான சேவை மற்றும் வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் இவற்றை அறிமுகப்படுத்தியுள்ளன.

தன்னியக்க பயணச்சீட்டு பரிசோதனை இயந்திரங்களின் மூலம் பயணிகள் தமது இருக்கைகளைத் தெரிவு செய்தல், தமது பயணச்சீட்டுகளை அச்சிடுதல் மற்றும் பயணப் பொதிகளுக்கான அடையாள குறியீட்டை அச்சிடுதல் உள்ளிட்ட சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பின்னர் பயணப்பொதிகள் சோதனை இயந்திரங்களுக்குச் சென்று, பயணிகள் தமது பயணப்பொதிகளை வைத்து, குடிவரவு மற்றும் குடியகல்வு அனுமதி பெறும் நடவடிக்கைகளுக்குச் செல்ல முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.



# பதுக்கல் சீனியைக் கைப்பற்றி மக்களுக்கு வழங்க நடவடிக்கை

சட்டவிரோதமாகப் பதுக்கி வைக்கப்பட்டுள்ள சீனித் தொகை கைப்பற்றப்பட்டு, கட்டுப்பாட்டு விலையில் மக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் சட்டத்தின் கீழ் இதற்கான அதிகாரம் இருப்பதாக அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய, சீனி தொகை பதுக்கி வைக்கப்பட்டுள்ள இடங்களை கண்டறிவதற்காக நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பேலியகொடையில் சீனி பதுக்கி வைக்கப்பட்டிருந்த களஞ்சியசாலையொன்றுக்கு நேற்று முன்தினம் சீல் வைக்கப்பட்டதுடன், அங்கிருந்து 270 மெட்ரிக் தொன் சீனி கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனிடையே, கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக சீனியை விற்பனை செய்த வர்த்தக நிலையமொன்றை நுகர்வோர் விவகார அதிகாரசபையினர் நேற்று முன்தினம் சுற்றிவளைத்தனர்.

அங்கிருந்து 5 மெட்ரிக் தொன் சீனி கைப்பற்றப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கடந்த சில தினங்களில் கட்டுப்பாட்டு விலையை மீறி சீனியை விற்பனை செய்த 300 இற்கும் அதிகமான வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் சீனிக்கான 25 சத வரியை இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து 50 ரூபாவாக அதிகரிக்க நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்ததையடுத்து சந்தையில் சீனிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து, ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் விலை அதிகரிப்பை தடுக்கும் நடவடிக்கையாக விசேட வர்த்தமானியின் மூலம் சீனிக்கு அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிக்க நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்தது.

அதற்கமைய, பொதி செய்யப்படாத ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் அதிகபட்ச சில்லறை விலை 275 ரூபாவாகவும்பொதிசெய்யப்படாதசிவப்பு சீனி ஒரு கிலோகிராமின் விலை 330 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.




# யாழில் சர்வதேச தரத்தில் சதுரங்கம் டிசம்பர் 8 முதல் 12 வரை நடைபெறும்

சர்வதேச தரத்திலான சதுரங்கப் போட்டி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் டிசம்பர் 8ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

'யாழ்ப்பாண சர்வதேச சதுரங்கப் போட்டி 2023' என்ற தலைப்பில், யாழ். மாவட்ட சதுரங்க சம்மேளனத்தினால் நடத்தப்படும் இந்தப் போட்டியில் 800க்கும் மேற்பட்ட வீர – வீராங்கனைகள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையிலிருந்து மாத்திரம் அன்றி தமிழ்நாடு உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்தும் போட்டியாளர்கள் பங்கேற்பார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். ஊடக அமையத்தில் கடந்த சனிக்கிழமை காலை போட்டி ஏற்பாட்டாளர்கள் நடத்திய ஊடக சந்திப்பின் போது இதுகுறித்துக் கருத்து தெரிவித்தனர்.

அங்கு அவர்கள் தெரிவித்தவை வருமாறு–

"சர்வதேச தரத்தில் நடத்தப்படும் சதுரங்கப் போட்டியில் 150 இற்கு மேற்பட்டவர்களுக்குக் பரிசு கிடைக்கும் விதமாக வரையறுக்கப்பட்டுள்ளது.

இதில் சகல வயதுப் பிரிவிலும், இருபாலரும் கலந்து கொண்டு, பரிசில்கள் பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் போட்டி சர்வதேச போட்டியாக அமைவுள்ளதால், எமது பிரதேசத்தில் உள்ள சதுரங்க வீரர்கள் தங்களின் சர்வதேச தரத்தை கூட்டுவதற்கு இது, மிகவும் பயனுள்ளதாக அமையும்.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எம்மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டும் சர்வதேச போட்டிக்கான எமது இத்தனை வருட கனவை நேர்த்தியான முறையில் பூர்த்தி செய்ய அனைத்து தரப்பின் ஆதரவையும் கோரி நிற்கிறோம்.

போட்டி தொடர்பிலான மேலதிக தகவல்கள் தேவைப்படுவோர்,

+94757466484 எனும் தொலைபேசி இலக்கம் ஊடாகவோ அல்லது Jdcanew@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரி ஊடாகவோ தொடர்பு கொள்ளுமாறும், https://www.facebook.com/profile.php?id=100079627133737&-mibextid=LQQJ4d எனும் எமது முகநூல் பக்கத்தின் ஊடாக மேலும் தகவல்களை அறிந்து கொள்ள முடியும்" எனத் தெரிவித்தனர்.



# இறுதியில் இந்தியா!






உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் நியூஸிலாந்தை வீழ்த்திய இந்திய அணி, இறுதிப் போட்டிக்கு முதல் அணியாகத் தகுதிபெற்றது.

13ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது.

இத்தொடர் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ள நிலையில், மும்பை வான்கடே ஸ்டேடியத்தில் நேற்று முதலாவது அரையிறுதியாட்டம் நடைபெற்றது.

இதில் முன்னாள் சம்பியனான இந்திய அணி, நியூஸிலாந்துடன் மோதியது.

இந்தப் போட்டியில் இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அதன்படி தொடக்க வீரர்களாக அணித்தலைவர் ரோஹித் சர்மா மற்றும் சுப்மன் கில் ஆகியோர் களமிறங்கினர்.

அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய ரோஹித் சர்மா 47 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார். நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய சுப்மன் கில் அரைச்சதம் கடந்து 79 ஓட்டங்களைச் சேர்த்திருந்த நிலையில் காயம் காரணமாக இடையில் வெளியேறினார்.

பின்னர் வந்து அதிரடியாக விளையாடி சதமடித்த விராட் கோஹ்லி (117) மற்றும் ஸ்ரேயாஸ் ஐயர் (105) ஆகியோர் அணியை வலுப்படுத்திச் சென்றனர்.

தொடர்ந்து சூர்யகுமார் யாதவ் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். இதையடுத்து சுப்மன் கில் மீண்டும் களமிறங்கினார்.

இறுதியில் 50 ஓவர்கள் முடிவில் இந்தியா 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 397 ஓட்டங்களைக் குவித்தது.

கே.எல்.ராகுல் 39 ஓட்டங்களுடனும் சுப்மன் கில் 80 ஓட்டங்களுடனும் களத்தில் நின்றனர்.

பின்னர் 398 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் நியூஸிலாந்து அணி களமிறங்கியது.

தொடக்க வீரர்களான கான்வே மற்றும் ரச்சின் ரவீந்திரா ஆகியோர் தலா 13 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தனர். இவர்களைத் தொடர்ந்து கனே வில்லியம்சன் 69 ஓட்டங்களுடன் வெளியேறினார். அந்த அணி சார்பாக டேரைல் மிட்செல் சதம் (134) கடந்து சிறப்பாக ஆடிச் சென்றார்.

கிளென் பிலிப்ஸ் 41 ஓட்டங்களைச் சேர்த்துச்செல்ல, ஏனைய வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

இறுதியில் 48.5 ஓவர்களில் நியூஸிலாந்து அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 327 ஓட்டங்களைச் சேர்த்தது.

இதனால், 70 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இந்திய அணி சார்பாக பந்துவீச்சில், மொஹமட் சமி 7 விக்கெட்டுகளைச் சாய்க்க, எஞ்சிய விக்கெட்டுகளை பும்ரா, சிராஜ், யாதவ் ஆகியோர் தலா ஒன்றுப் படி சாய்த்தனர்.

ஆட்டநாயகனாக இந்தியாவின் மொஹமட் சமி தெரிவானார்.

இதுவரை இந்திய அணி எதிர்கொண்ட அனைத்துப் போட்டிகளிலும் வெற்றியைப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்று நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் தென்னாபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் களம் காணவுள்ளன.

# சதத்தில் அரைச்சதம்

# கோஹ்லி சாதனை!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நியூஸிலாந்துக்கு எதிராக நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், விராட் கோஹ்லி, 106 பந்துகளில் ஒரு சிக்ஸர், 8 பௌண்டரிகள் அடங்கலாக சதமடித்தார்.


இதன் மூலம் அவர், ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் 50 சதங்கள் அடித்த முதல் வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

ஒருநாள் போட்டிகளில் சச்சின் டெண்டுல்கர் 49 சதங்கள் அடித்ததே அதிக சதம் என்ற சாதனையாக இருந்தது. இதனை நடப்பு உலகக் கிண்ணத் தொடரிலேயே சமன் செய்திருந்த கோஹ்லி, தற்போது மேலும் ஒரு சதம் அடித்து சச்சினின் சாதனையை முறியடித்து தனக்கென ஓர் இடத்தைப் பதிவு செய்தார்.



சச்சினுக்கு மரியாதை






279 ஒருநாள் இன்னிங்ஸ்களில் விளையாடியே அவர் இந்தச் சாதனையைப் படைத்துள்ளார்.

இவருக்கு அடுத்து இரண்டாவது இடத்தில் சச்சின் டெண்டுல்கர் (49 சதங்கள்), மூன்றாவது இடத்தில் ரோஹித் சர்மா 31 சதங்களுடனும், நான்காவது இடத்தில் அவுஸ்திரேலிய முன்னாள் வீரர் பொண்டிங் 30 சதங்களுடனும், ஐந்தாவது இடத்தில் இலங்கையின் முன்னாள் அதிரடி வீரர் சனத் ஜெயசூர்ய 28 சதங்களுடனும் உள்ளனர்.

அதேவேளை, உலகக் கிண்ணத் தொடர் ஒன்றில் அதிக ஓட்டங்களைக் குவித்த வீரர் என்ற சச்சின் டெண்டுல்கரின் சாதனையையும் விராட் கோஹ்லி முறியடித்துள்ளார். 2003ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் சச்சின் டெண்டுல்கர் 673 ஓட்டங்களைக் குவித்ததே சாதனையாக இருந்தது.

இந்நிலையில் நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் 10 போட்டிகளில் விளையாடியுள்ள விராட் கோஹ்லி, 673 ஓட்டங்களைக் கடந்துள்ளார். இதன் மூலம் விராட் கோஹ்லி உலகக் கிண்ணத் தொடர் ஒன்றில் அதிக ஓட்டங்கள் அடித்தவர் என்ற சாதனையையும் படைத்துள்ளார்.

இதற்கிடையில், உலகக் கிண்ணத் தொடர் ஒன்றில் அதிக தடவைகள் அரைச்சதம் அடித்த வீரர் என்ற சாதனையையும் படைத்தார்.

ஏற்கனவே, 7 தடவைகள் அரைச்சதம் அடித்த சச்சின் (2003), ஷகிப் அல் ஹசன் (2019) ஆகியோரின் சாதனையை முறியடித்து நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் 8ஆவது தடவையாக அரைச்சதம் கடந்து விராட் கோஹ்லி இந்தச் சாதனையை படைத்துள்ளார்.




## சச்சின் வாழ்த்து


Sachin Tendulkar
@sachin_rt

The first time I met you in the Indian dressing room, you were pranked by other teammates into touching my feet. I couldn't stop laughing that day. But soon, you touched my heart with your passion and skill. I am so happy that that young boy has grown into a 'Virat' player.

I couldn't be happier that an Indian broke my record. And to do it on the biggest stage - in the World Cup Semi-final - and at my home ground is the icing on the cake.

#INDvNZ

